## அல்லேலூயா கர்த்தரையே

அல்லேலூயா கர்த்தரையே ஏகமாய் துதியுங்கள்
அவர் நடத்தும் செயல்களெல்லாம் பார்த்தோரே துதியுங்கள்
வல்லமையாய் கிரியை செய்யும் வல்லோரை துதியுங்கள்
எல்லோரையும் ஏற்றுக் கொள்ளும் இயேசுவை துதியுங்கள்

இராஜாதி ராஜனாம் இயேசுராஜன்
பூமியில் ஆட்சி செய்வார்
அல்லேலூயா, அல்லேலூயா
தேவனை துதியுங்கள்

தம்பூரோடும், வீணையோடும் தேவனை துதியுங்கள்
ரத்தத்தினால் பாவங்களை போக்கினார் துதியுங்கள்
எக்காளமும் கைத்தாளமும் முழங்கிட துதியுங்கள்
எக்காலமும் மாறாதவர் இயேசுவை துதியுங்கள்

சூரியனே, சந்திரனே தேவனை துதியுங்கள்
ஒளியதனை எங்கள் உள்ளம் அளித்தோரை துதியுங்கள்
அக்கினியே கல்மழையே படைத்தோரை துதியுங்கள்
அக்கினியாய் கல்மனதை உடைப்போரை துதியுங்கள்

பிள்ளைகளே, வாலிபரே தேவனை துதியுங்கள்
வாழ்வதனை அவர் பணிக்கே கொடுத்து நீர் துதியுங்கள்
பெரியவரே, பிரபுக்களே தேவனை துதியுங்கள்
செல்வங்களை இயேசுவுக்காய் செலுத்தியே துதியுங்கள்